**ஆரணி நகராட்சி**

**சாதாரணக் கூட்டம்**

2021-ம் ஆண்டு மே மாதம் 31.05.2021-ந்தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர்

பொருட்கள்

**பொருள் எண் 1.**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து இயலாமை காரணமாக தி.மலை மாவட்ட மருத்துவ குழு பரிந்துரை படி 28.10.2020 அன்று ஓய்வு பெற்ற திரு.க.ராஜ என்பவருக்கு கீழ்க்கண்டவாறு

1. சிறப்பு சேம நலநிதி அசல் - 4000/-
2. சிறப்பு சேம நலநிதி சந்தா கான வட்டி - 9640/-
3. நிர்வாக பங்குத் தொகை - 10000/-

**ஆக மொத்தம் - 23640/-**

**அலுவலக குறிப்பு:-**மன்றம் அனுமதி அளிக்கலாம்(ந.க.எண்:364/2021/பி2)

**பொருள் எண்** 2.

இந்நகரட்சியின் வரியினங்கள் சம்மந்தமாக டிமாண்ட் ரிஜிஸ்ட்டர் மற்றும் டிமாண்ட் நோட்டீஸ் கணினி பிரிவு, பொது பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவு, மற்றும் நகரமைப்பு பிரிவு உள்ள கணினி பிரிண்டர் டோனர் கணினி சமந்தப்பட்ட உதிரி பாகங்கள் மற்றும் ஆண்டி வைரஸ் அரசு அங்கிகாரம் பெற்ற கூட்டுறவு சங்கத்தின் மூலம் வாங்கிக்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 300000- க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்** 3.

மாவட்ட தேர்தல் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் சட்டமன்ற தேர்தலில் அனைத்து வக்கலர்களுகும் வாக்காளர்களும் வாக்களிக்க வருகின்ற பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பரம் செய்யுமாறு அரசானை எண்: 158, நாள்: 27.02.2019– ன் படி நடைமுறைபடுத்துமாறு தி.மலை மா.ஆட்சித் தலைவரின் ஆலோசனை கூட்டம் நாள்: 02.03.2021 ல் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி ஆரணி நகராட்சியின் எல்லைக்குட்ப்பட 33 வார்டுகளில் சட்டமன்ற தேர்தலில் பொதுமக்கள் 100% வாக்குபதிவு செய்ய அறிவுறுத்த கலைக்குழுவின் மூலமாக விழிப்புணர்வு பிரச்சாரம் செய்ய கீழ்க்கண்ட கலைகுழுவினரிடம் விலைப்புள்ளி பெறப்பட்டது.

1. சிவசக்தி கிராமிய கலைக்குழு,
   வள்ளலார் குடில், வள்ளலார் சாலை,
   சாய்ராம் நகர், விருத்தாச்சலம்,
   கடலூர் மாவட்டம். நாள் ஒன்றுக்கு — ரூ. 20,000/–
2. ஜெயம் கலைக்குழு,
   கிரிஷ்ணகிரி மாவட்டம். — ரூ. 21,000/–
3. உதயம் கலைக்குழு
   தருமபுரி மாவட்டம். — ரூ. 21,500/–

**அலுவலக குறிப்பு:** மேற்படி கலைக்குழுவினரால் குறைந்த விலைப்புள்ளி கோரியுள்ள சிவசக்தி கிராமிய கலைகுழுவிற்கு ஒரு நாள் மட்டும் கலை நிகழ்ச்சி நடத்தி கொள்ள அனுமதி வழங்கலாம். (ந.க.எண்:450/2019/சி 1)

**பொருள் எண்** 4.

திருவண்ணாமலை மாவட்ட ரெட்கிராஸ் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய சந்தா தொகை சம்மந்தமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகம்(MA IV) துறை அரசானை எண்: (MS)157/ நாள்: 03.11.2016 ரெட்கிராஸ் சங்கம் செய்யும் மனித நேய இன்படி சேவைகளுக்கு பயன்படும் வகையில் நகராட்சிகள் தமது பங்களிப்பாக ஆண்டுக்கு ரூ. 12/– ஆகவும், பின்னர் அத்தொகை ரூ. 25/– எனவும் உயர்த்தப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக ஆரணி நகராட்சியில் இருந்து பங்களிப்பு ஏதும் இச்சங்கத்திற்கு வழங்கபடவில்லை. எனவே இந்நகராட்சியில் இருந்து கீழ்க்கண்ட விவரப்படி நிலுவை தொகை இச்சங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

2003–04 முதல் 2021–13 வரை ரூ.50/– வீதம் 10 ஆண்டுகளுக்கு ரூ.500/–ம்
2013–14 முதல் 2015–16 வரை ரூ.500/–வீதம் 3 ஆண்டுகளுக்கு ரூ. 1500/– ம்
2016–17 முதல் 2020–2021 க்கு ரூ.2500/– வீதம் 5 ஆண்டுகளுக்கு 12500– ஆம்
மொத்தம் – ரூ.14500–னை மாவட்ட ரெட்கிராஸ் சங்கத்திற்கு நிலுவை தொகையை செலுத்த மன்றத்தின் முன் அனுமதிக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 1435/2020/சி1)

**<u>பொருள் எண்</u>** 5.

ஆரணி நகர சர்வே வார்டு E, பிளாக் 1, நகரளவு எண். 60 யில் உள்ள அரசு புறம்போக்கு இடத்தை ஆக்கிரமித்து கடை கட்டியுள்ள திரு. E. மனோகரன், என்பவர் ஆணையரை பிரதிவாதியாக கொண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்: W.P. NO. 9393/2021, இவ்வழக்கு தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞ்சர் திரு. லூர்து பால் மௌரியா, நகராட்சி சார்பாக ஆஜராகி உள்ளார். அவருக்கு வழக்கு கட்டணமாக ரூபாய் 1500/- செலுத்த கோரி ரசீது வரப்பெற்றுள்ளது. மேற்காணும் வழக்கு கட்டணம் செலுத்துவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண்: 396/2021/எப்1)

**<u>பொருள் எண்</u>** 6.

ஆரணி நகர சர்வே வார்டு E, பிளாக் 1, நகரளவு எண்: 60 யில் உள்ள அரசு புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமித்து கடை கட்டியுள்ள திரு. A. நடராஜன் த/பெ ஆதிகேசவன், என்பவர் ஆணையரை பிரதிவாதியாக கொண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்: W.P.NO.9436/2021 இவ்வழக்கு தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞசர் திரு. லூர்து பால் மௌரியா, நகராட்சி சார்பாக ஆஜராகி உள்ளார். அவருக்கு வழக்கு கட்டணமாக ரூபாய் 1500/- செலுத்த கோரி ரசீது வர பெற்றுள்ளது. மேற்காணும் வழக்கு கட்டணம் செலுத்துவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண்:- 396/2021/எப்1)

**<u>பொருள் எண்</u>** 7.

இந்நகராட்சி சித்த மருத்துவ அலுவலர் குறிப்பின்படி நகரில் கொரோனா நோய் மற்றும் டெங்கு நோய் பரவாமல் கட்டுபடுத்த கபசுர குடிநீர் மற்றும் நிலவேம்பு கசாய பவுடர் உடன் மாத்திரைகள் போன்றவை சென்னை Tampcol அரசு நிறுவனத்திடம் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.1,17,420/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைகப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1.மன்றம் அனுமதிக்கலாம். 2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மருந்துகள் வாங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.(கோப்பு எண்: 5783/2007/எச்

**பொருள் எண்** 8.

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் 3 ACE ஆட்டோவிற்கு 25.03.2021ந் தேதியோடு இன்சூரன்ஸ் முடிவடைகிறது. மேலும் ஒரு ஆண்டுக்கு புதுபிக்க யுனைடேட் இந்திய இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட விவரப்படி இன்சூரன்ஸ் தொகை செலுத்தவும் அதற்காக ஆகும் செலவினம் ரூ. 59067/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. ACE ஆட்டோ TN 97 1839 – 19689/–
2. ACE ஆட்டோ TN 97 1856 – 19689/–
3. ACE ஆட்டோ TN 97 1833 – 19689/–

**அலுவலக குறிப்பு:–** 1.மன்றம் அனுமதிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். 3. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண்: 634/2016/எச்1)

**பொருள் எண்** 9.

ஆரணி நகராட்சி உட்பட புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் உள்ள நம்ம கழிவறையில் உள்ள பைப் லைன், குழாய் உடைப்பு ஏற்பட்டதால் புதியதாக வாங்கி பொறுத்த மற்றும் வார்ட்25 கந்தசாமி தெரு, வார்ட்–26 மேட்டு தெரு, வார்ட்–28 ஆனந்தபுரம் தெரு, வார்ட்–28 பள்ளிகூடதெரு, வார்ட்–12 மாதவாராயண் பேட்டை தெரு, வார்ட்–8 பரசுராமன் தெரு, வார்ட்–30 நகர், வார்ட்–1 புதுகாமூர் ரோடு, வார்ட்–3 சந்தா தெரு, வார்ட்–22 அப்பாசாமி தெரு ஆகிய தெருக்களில் உள்ள குடிநீர் குழாய் பைப் லைன் உடைப்பு ஏற்ப்பட்டதால் அதனை புதியதாக மாற்ற ஆகும் தோராய செலவினம் ரூ.30000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 10.**

ஆரணி நகராட்சியில் 2019–2020 ஆம் ஆண்டிற்கு தணிக்கை கட்டணம் செலுத்த கோரி உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, திருவண்ணாமலை அவர்களிடம் கடிதம் ந.க.எண்: 27/அ1/2021 நாள்:10.03.2021 வரபெற்றுள்ளது. எனவே இந்நகராட்சிக்கான 2019–2020 ஆம் ஆண்டு தணிக்கை கட்டணம் ரூ.149188/– உரிய அரசு தலைப்பில் செலுத்த வேண்டி உள்ளதால் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்: 2706/எப்/2017)

**<u>பொருள் எண்</u>** 11.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் – 12 அவர்களின் குறிப்பாணையில் தெரிவிக்கப்படுள்ளதிர்கிணங்க காந்தி காய்கறி அங்காடி புதியதாக கட்டப்பட்டு வந்த காலத்தில் அங்கு கடைகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் நகராட்சி அலுவலக வளாகத்தில் கடைகளை நடத்திய நபர்கள் (76 எண்ணிக்கை) வாடகை தொகை செலுத்தவில்லை. எனவே நகராட்சி வழக்கறிஞரை தொடர்பு கொண்டு கடந்த 30.04.2021 அன்று காந்தி காய்கறி அங்கவாடி சங்க தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர்க்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி கடை நடத்தி குத்தகை செலுத்தாத நபர்களில் தற்போது 5 நபர்களுக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பவும் அதனை தொடர்ந்து நீதி மன்றத்தில் வழக்கு தொடரவும் அதற்கான நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம். (ந.க.எண்: 2485/அ3/2019)

**<u>பொருள் எண்</u>** 12.

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன எறிவாயு தகன மேடை போதிமரம் அறகட்டளை பராமரித்து வருகிறது. அந்த அரக்கட்டளையே மேலும் மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்க விருப்பம் தெரிவித்து உள்ளது எனவே 01.04.2021 முதல் போதிமரம் அறகட்டளை நவீன எறிவாயு தகன மேடையை ஒப்பந்த அடிப்படையில் பராமரிக்க ஒப்படைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்</u>** 13.

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சொத்து வரி சம்மந்தப்பட்ட இந்து எண்ணிக்கையிலான வழக்குகள், இந்நகராட்சிக்கு சாதகமான தீர்ப்புகள் வந்துள்ளதால் இந்நகரமன்ற வழக்கறிஞர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட பட்டியலின்படி

ஐந்து வழக்குகளுக்கான வழக்கறிஞ்ர் கட்டணம் ரூ. 12500/– ரூபாய் பன்னிஇரண்டாயிரத்து ஐநூறு மட்டும் வழங்க இந்நகரமன்ற பார்வைக்கு ஒப்புதல் கோரப்படுகிறது.

வழக்கு எண்கள்:–

1. A.S.NO: 3/2016
2. A.S.NO: 4/2016
3. A.S.NO : 9/2017
4. A.S.NO : 9/2017
5. A.S.NO : 9/2017

**அலுவலக குறிப்பு:–**மன்றம் அனுமதிக்கலாம் .

**<u>பொருள் எண்</u>** 14.

இந்நகராட்சி பகுதியில் கொரானா நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர் சடலங்களை JCB டிராக்டர் ஆரணி நிறுவனத்திற்கு ரூ.189600/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண்: 579/எச்1/2021)

**<u>பொருள் எண்</u>** 15.

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவற்றை கொரோனா நோயை கட்டுப்படுத்த M/S Tirupattur Agro Engineering Service - ல் வாங்கியதற்கு ரூ. 1106250/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம் . தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். . (கோப்பு எண்: 483/எச்1/2021)

**<u>பொருள் எண்</u>** 16.

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தடுக்கும் பொருட்டு தெர்மல் ஸ்கேன் - 50. கட்டபடுத்த M/S Tirupattur Agro Engineering Service - ல் வாங்கியதற்கு ரூ. 124000/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம் . தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். . (கோப்பு எண்: 483/எச்1/2021)

**<u>பொருள் எண்</u>** 17.

ஆரணி நகராட்சியில் ஆற்காடுமுப்பது வட்டி தலைமை நிரேற்று நிலையம் மூலம் நாள் ஒன்றுக்கு 3MLD ஆரணிக்கு வருகிறது. இது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் UIDSSMT திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு, தற்போது Booster Station - ல் இரவு காவலர் மற்றும் மின் மோட்டார்களை இயக்க, ஏற்கனவே தனியார் சாய்பாபா ஆண்கள் குழு மூலம் மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த குழுவிற்கு மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ள ஊதிய நிர்ணையத்தில் செயல்படுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.10.00/- இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய நகர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம் . (கோப்பு எண்: 766/2020/இ1)

<u>ஆரணி நகராட்சி</u>

<u>சாதாரணக் கூட்டம்</u>

2021–ம் ஆண்டு மே மாதம் 31.05.2021–ந்தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

| வ.எண். | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 251 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 2 | 2 | 252 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 3 | 3 | 253 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 4 | 4 | 254 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 5 | 5 | 255 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 6 | 6 | 256 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 7 | 7 | 257 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 8 | 8 | 258 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 9 | 9 | 259 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 10 | 10 | 260 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 11 | 11 | 261 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 12 | 12 | 262 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 13 | 13 | 263 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 14 | 14 | 264 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 15 | 15 | 265 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 16 | 16 | 266 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 17 | 17 | 267 | அனுமதி வழங்கப்படுகிறது. |

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.

.